ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

ECHOES இந்தியா

செய்திமடல்

# மாஸ்டரைப் பற்றிய செய்திகள்



## ஆசிரியர் குறிப்பு

நம் அன்பிற்குரிய மாஸ்டர் சாரிஜி அவர்கள் காலமானதை ஏற்று நாம் பக்குவப்படும் வேளையில், அவருடைய ஆன்மீக வாரிசான மதிப்பிற்குரிய கம்லேஷ்ஜி அவர்களைப் பற்றி அறிய முற்பட்டும் வருகிறோம். அவர், தம் பணியைத் தொடர்வதற்கும், அப்யாசிகள் அவரை அணுகும் முறை, தம் பயிற்சியின் மீதான கவனத்துடன் மிஷனுக்கும் பணியாற்றுவது ஆகியவற்றில் மாற்றம் கொண்டு வருவதற்கும், நேரத்தை சிறிதளவும் வீணாக்கவில்லை. அவர், சகஜ் சந்தேஷ் மூலமாக கொடுத்து வரும் தகவல்கள், ஆறுதலாகவும், மிஷனுக்கான அவருடைய தொலைநோக்குப் பார்வையைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை அளிப்பதாகவும் இருக்கின்றன. அவருடைய பிரான்ஸ் பயணமும், நியு ஜெர்சி கூட்டங்களும் ஏற்கனவே மிஷனின் செயல்பாட்டில் பல மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன. இவ்விதழில், இந்த சுற்றுப்பயணம் மற்றும் நியு ஜெர்சியில் அவர் ஆற்றிய உரைகளின் சிறப்பம்சங்களை தொகுத்தளிக்கிறோம்.

## மான்ட்பெல்லியர், பிரான்ஸ் - ஜனவரி 7, 2015

ஜனவரி 1-ம் தேதி, சிறிதும் எதிர்பார்க்கப்படாத செய்தி கிடைத்ததும், அவரை வரவேற்க, உள்ளூர் அப்யாசிகள், அதிக அளவில் சகோதர சகோதரிகளை ஒன்றுகூடச் செய்தனர். 24 மணிநேரத்தில், பிரான்ஸ் மற்றும் அண்டை நாடுகளிலிருந்து தங்கள் குடும்பத்தோடு வந்திருந்த 800 அப்யாசிகளுக்கு ஒரு வளாகம் ஏற்பாடு செய்யப்பட்டது.

நடைபெற்ற 3 சத்சங்கங்களில் முதலாவதை, காலை 7.30 மணிக்கு, பிரார்த்தனை மிக்கதோர் சூழலில் கம்லேஷ்ஜி நடத்தினார். பின்னர் அவர், பின்வருமாறு கூறி எங்களுக்கான பாதையை வகுத்துக்கொடுத்தார்:

"...தயவு செய்து உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தாதீர்கள். ஒரு கணத்தில், மாஸ்டரைப் பற்றி சிந்தித்து நீங்கள் மகிழ்ச்சியுற்றால், மகிழ்ச்சியாய் உணருங்கள்; அவரது இல்லாமையைக் குறித்து நீங்கள் வருத்தமுற்றால் இரு துளி கண்ணீர் சிந்தினாலும் பரவாயில்லை. தனிமையில் வாடும் இதயத்தோடு, நன்றி நிறைந்த, புன்னகை பூத்த இதயத்தோடு நாம் எப்போதும் அவரை நினைவு கூரலாம். இப்போது அவர் இன்னும் எளிதில் அணுகக் கூடியவராய் இருக்கிறார்; நம்மில் ஒன்றரக் கலந்துவிட்டார். நம்மை நாமே அவருள் எவ்வாறு கரைப்பது என்பதே, இப்போது நாம் செய்ய வேண்டிய பயிற்சியாகும். அது நம்மைச் சார்ந்ததேயாகும்; நாம் அக்கரைதல் நிலையை விரைவாக அடைய பிரார்த்திக்கிறேன். அதைத் தான் பாபூஜி மகராஜ் விரும்புகிறார், அதைத் தான் மாஸ்டர் விரும்புகிறார், அதைத் தான் குரு மரபு விரும்புகிறது - அவருடைய அண்டமளாவிய பிரசன்னத்தில் முழுமையாக ஈர்த்துக்கொள்ளப்படுவது; இதைத் தான் நாம், இறுதி இலட்சியத்தில் ஐக்கியமாதல் என்று அழைக்கிறோம். பிரார்த்தனையுடன், அனைவருக்கும் நன்றி."

குறுகிய கால அவகாசத்திற்குள், பெருமளவில் அப்யாசிகள் ஒன்று கூடியது, தன்னை மிகவும் நெகிழச் செய்துவிட்டதாக அவர் கூறினார். அவர் எங்களுக்கு அளித்த அருமையான அந்த நாளுக்காக நாங்கள் அனைவரும் ஆனந்தத்துடனும் நன்றியுடனும் திரும்பிச் சென்றதோடு மட்டுமல்லாமல், அந்நாளை பகிர்ந்துகொள்ள நாங்கள் பெரும் எண்ணிக்கையில் வந்திருந்ததற்கு அவரும் எங்களுக்கு நன்றி கூறினார்!



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்

**நமது ஈடுபாட்டை ஆழப்படுத்துவதற்கான பிரார்த்தனை நிறைந்த ஆலோசனைகள்**

* *9 மணி அகிலமளாவிய பிரார்த்தனை - உலகெங்கிலுமுள்ள அனைத்து சகோதரிகளும், சகோதரர்களும் அன்பினாலும் பக்தியினாலும் நிரப்பப்படுகிறார்கள். அவர்களது இதயங்களில் உண்மையான நம்பிக்கை பலமாக வளர்கிறது.*
* *அனைத்து சகோதரிகளும், சகோதரர்களும் நற்சிந்தனை, சரியான புரிந்து கொள்ளுதல் மற்றும் வாழ்க்கையில் நேர்மையான அணுகுமுறை ஆகியவற்றை வளர்த்துக் கொள்கிறார்கள்.*
* *நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் கடவுளின் நினைவில் ஆழ்ந்து மூழ்கியுள்ளன.*
* *பரம்பொருளுக்காக உண்மையிலேயே ஏங்கித் தவிக்கும் அனைத்து சகோதரிகளும், சகோதரர்களும், நம் மகோன்னதமான பேரன்புமிக்க மாஸ்டரை நோக்கி கவர்ந்திழுக்கப்படுகிறார்கள். 'அவர்கள் அனைவருமே தங்களின் தெய்வீக அருளால் பலன்பெறட்டும்' என்ற பிரார்த்தனையையும் நம் மாஸ்டரிடம் சமர்ப்பிப்போம்.*

ஜனவரி மாதம் 30 மற்றும் 31 ஆம் தேதிகளில் மன்ரோ ஆசிரமத்தில் மாஸ்டர் பேசிய உரையிலிருந்து எடுக்கப்பட்ட சில துளிகள். முழு உரையையும். *http://www.sahajmarg.org/literature/online/speeches/newjersey-20150130* என்ற இணையதளத் தொடர்பில் கேட்கலாம்.



## அமெரிக்காவில் பண்டாரா

ஜனவரி 23ஆம் தேதி முதல் 25ஆம் தேதி வரை வடக்கு அமெரிக்காவின் அப்யாசிகள் அனைவரும், கமலேஷ்ஜியை அவரது, ஆன்மீக மாஸ்டர் மற்றும் ராம் சந்த்ர மிஷனின் தலைவர் என்ற புதிய பரிமாணத்தில் கண்டு, அவரோடு இருந்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். வசந்த பஞ்சமி உற்சவத்தன்று, நியூ ஜெர்ஸியில், திடீரென ஏற்பாடு செய்யப்பட்ட பண்டாரா, அமெரிக்கக் கண்டம் முழுவதிலுமிருந்து வந்திருந்த சுமார் 1,100 அப்யாசிகள் கலந்து கொண்ட, வடக்கு அமெரிக்காவின் ஒரு ஒன்றுகூடல் கூட்டமாக மாறியது. 50 தன்னார்வத் தொண்டர்களைக் கொண்ட ஒரு முக்கியக்குழு, ஏற்பாட்டிற்கான எல்லாப் பணிகளையும் கவனித்துக் கொண்டது.

அந்த கூட்டம் ஒரு ஹோட்டலில் நடைபெற்றது. அந்த மூன்று நாட்களும், ஹோட்டல் ஆசிரமமாக ஆகியிருந்தது. அதன் பரந்த நடனக் கூடம், ஒரு விசாலமான மற்றும் கலையழகு மிகுந்த தியானக்கூடமாகியது. கமலேஷ்ஜியும், பெரும்பாலான வெளியூர் அப்யாசிகளும் அங்கேயே தங்கினர்.

வெள்ளிக்கிழமை மாலை 5 மணி சத்சங்கத்துடன், கூட்டம் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, தனது மாஸ்டர் சாரிஜி கூறிய உண்மையான பயிற்சியின் அவசரத் தேவை பற்றி, கமலேஷ்ஜி இதயபூர்வமான ஒரு உரை நிகழ்த்தினார். சாரிஜி தனது நாட்குறிப்புகளில் மிகவும் தெளிவாகவும்,நேர்மையுடனும் எழுதினார் என்று குறிப்பிட்டு, அப்யாசிகள் பரிபூர்ணமான உண்மையுடன், குறிப்பாக தங்களுக்கு தாங்களே உண்மையுடன் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். அந்த உரையின் முடிவில், அவர் அப்யாசிகளை வெள்ளிக்கிழமை 9 மணி சிட்டிங்கிற்கு மீண்டும் அந்தக் கூடத்தில் ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுத்தார்.

சனிக்கிழமை காலை, வசந்த பஞ்சமி உற்சவத்தன்று, காலை 7.15மணிக்கு, Skype மூலமாக, டொரான்டோ ஆசிரமத்தை கமலேஷ்ஜி தொடங்கி வைத்து, கனடா மற்றும் அமெரிக்கா முழுவதிலுமிருந்து டொரான்டோ வந்திருந்த 200 அப்யாசிகளுக்கு உரை நிகழ்த்தி, ஒரு அற்புதமான சிட்டிங்கும் வழங்கினார்.

9 மணி சத்சங்கத்திற்குப் பிறகு, கமலேஷ்ஜி ஒரு சிற்றுரை நிகழ்த்தியதோடு, பதிவு மேசை (Registration desk) அருகில் பல மணி நேரங்கள் அமர்ந்து கொண்டு, இந்த வருடத்தில் வெளிவரப் போகும், லாலாஜியின் வாழ்க்கை பற்றிய ஒரு புதிய புத்தகத்திற்கான முன்பதிவு விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டும், அப்யாசிகளுடன் இதயத்திற்கு இதமாகவும், நேரிடையாகவும், நகைச்சுவை உணர்வுடனும், கலந்துரையாடல் நிகழ்த்திக் கொண்டுமிருந்தார். அதன் பிறகு அவர், வடக்கு அமெரிக்காவிலிருந்து வந்திருந்த சுமார் 150 ப்ரிபெட்டுகளைச் சந்தித்து, நமது மாஸ்டர்கள், மிஷனில் அனுமதித்திருக்கும், சமீபத்திய ஒளியுலகத்திலிருந்து வரும் அருட்செய்திகளிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள புதிய மாற்றங்களைப் பற்றி எடுத்து இயம்பினார்.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்



மாறிக்கொண்டிருக்கும் காலத்திற்கேற்ப, ஆன்மீக நாட்டமுடையவர்களை எளிய முறையில் அணுகி, அவர்களை தியானம் செய்ய ஊக்குவித்து, அதனால் ஏற்படும் மாற்றங்களை தாமாகவே உணருமாறு செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். அவர், கூடியிருந்த எல்லா ப்ரிபெக்டுகளுக்கும் ஒரு சிட்டிங் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து இரவு 8 மணிக்கு புதிய அப்யாசி களை சந்தித்தார். இரவு 9 மணிக்கு சத்சங்கத்துடன் அந்நாள் முடிவுற்றது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையன்று காலை சத்சங்கத்திற்குப் பிறகு, கம்லேஷ்ஜீ ஒரு கேள்வி-பதில் நேரத்தை நடத்தினார். புதிய மாஸ்டருக்கும் அவரது அப்யாசிகளுக்குமிடையிலான இதயப் பிணைப்பை ஒருவர் உணர முடிந்தது. அங்கே - அன்பு, நகைச்சுவை, பொறுமை, மகிழ்ச்சி, அத்துடன், ஆழ்ந்த பயிற்சி செய்தல், உள்முகப்படுத்துதல், மற்றும் எண்ணங்கள் மூலம் மாஸ்டருடன் ஒரு நிரந்தரமான தொடர்பு கொள்ளுதல் ஆகியவை பற்றிய கடமையுணர்வும் இருந்தன. நிகழ்ச்சி தொடர்ந்து நடந்த போது, கம்லேஷ்ஜீயை சாரிஜீயின் ஒரு உண்மையான பிரதிபலிப்பாக உணர்ந்த பல அப்யாசிகள் மனம் நெகிழ்ந்து, நிகழ்ச்சி முடிவடைகையில் கண்ணீர் மல்க இருந்தனர். ஒரு அப்யாசி, "அவர்கள் இருவரும் ஒன்றே என்று நான் எனது இதயத்தில் உணருகிறேன்" என்று கூறினார்.

நிகழ்விடத்தை விட்டுக் கிளம்பிய கம்லேஷ்ஜீ, உள்ளூர் தொண்டூழியர்களுடன் அருகே உள்ள மன்ரோ ஆசிரமத்திற்குச் சென்றார். அங்கே அவர்களுக்கு சிட்டிங் வழங்கி, அவர்களுடன் மதிய உணவு உட்கொண்ட பிறகு அவர் தமது இல்லத்திற்குச் சென்றார்.

## சகஜ் சந்தேஷ் செய்தியின் சாரம்

**12 பிப்ரவரி 2015**

அமெரிக்காவின் நியூ ஜெர்சியில், ஜனவரி 23 -25 மற்றும் பிப்ரவரி 1-3 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இரண்டு கருத்தரங்குகளின் போது, நாங்கள் அனைவரும் ஒரு அற்புதமான நேரத்தை அனுபவித்தோம். இரண்டு நிகழ்ச்சிகளும் மிகவும் சிறப்பாக இருந்தன. என்னுடைய ஊர் திரும்பும் பயணம் 27 ஜனவரியன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஏதோ ஒரு வேலையின் காரணமாக என்னால் திரும்ப முடியவில்லை. பிறகு நான் 4 பிப்ரவரியன்று திரும்ப எண்ணியிருந்தேன். ஆனால் ஜுரத்தின் காரணமாய் அதுவும் நடைபெறவில்லை.

அதிர்ஷ்டவசமாக, நான் எனது உடல்நிலையில் நல்ல முன்னேற்றத்துடன், பிப்ரவரி 9ம் தேதி புறப்பட்டு, பிப்ரவரி 10 ம் தேதி இரவு மணப்பாக்கம் வந்தடைந்தேன்.

நியூ ஜெர்ஸியில் நடைபெற்ற இரண்டு கருத்தரங்குகளிலும் நம் சாதனையின் பல்வேறு அங்கங்களைப் பற்றி கலந்தாலோசிக்க முடிந்தது. அவை இப்போது சகஜ சந்தேஷில் வெளியிடப்பட்டுள்ளன. பரிந்துரைக்கப்பட்ட பிரார்த்தனை மிக்க ஆலோசனைகளை செயல்படுத்துவது நமது ஈடுபாட்டை தீவிரமாக்கும். மேலும் இப்பிரார்த்தனை மிக்க ஆலோசனைகளைப் பின்பற்றுபவர்கள், ஆக்கபூர்வமான மாற்றங்களைக் காண்பர் என்பதை நான் உறுதியாக அறிவேன்.

தற்போது பாபூஜி மெமோரியல் ஆசிரமத்தில் 25, ISAW அபேட்சகர்கள், தத்தம் பிராந்தியங்களில் ப்ரிபெக்டுகளாகப் பணிபுரிவதற்காகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்நிகழ்ச்சி 15ம் பிப்ரவரி முடிய வேண்டும். மேலும் தென் அமெரிக்காவிலிருந்து 100க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் உள்ளனர். அவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி பிப்ரவரி 14 ம் தேதி வரை நடக்கும்.

அன்பிற்குரிய மாஸ்டரிடம் அவரது அன்புக்காகவும் ஆசிகளுக்காகவும் பிரார்த்தனைகளுடன்

கம்லேஷ் D. படேல்



முடிவில் நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டியது ஒன்றே ஒன்று தான். அதாவது ஒரே ஒரு வழி தான் இருக்க வேண்டும்- மாஸ்டருடன் ஒரு தொடர்பு - அவ்வளவு தான். மற்றவையெல்லாம் இவ்வழியை ஆதரித்து வலியுறுத்தவேயாகும். என்னுடைய முயற்சிகளைச் செறிவு குன்றச் செய்து, மாஸ்டருடனான எனது தொடர்பை பலவீனப்படுத்தும் வேறு எதையும் நான் நிறுத்த வேண்டும். அதுவே விவேகமாகும். இதனை அடையாளம் கண்டு கொள்ள, எனக்கு விஷயங்களை சரியாகப் பகுத்தறியத் தெரிய வேண்டும்.

- கம்லேஷ்ஜீ

பிப்ரவரி 2, 2015, மன்ரோ ஆசிரமம்

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# பூஜ்ய லாலாஜி மகராஜின் 142வது பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள்

பூஜ்ய லாலாஜி மகராஜின் 142வது பிறந்த நாள், மூன்று நாள் விழாவாக அவரவர் மையங்களில் இந்தியாவின் அனைத்து ஆசிரமங்களிலும் கொண்டாடப்பட்டது. இவ்விழாவை கொண்டாடுவதற்காக, குளிர்கால காலையையும் பொருட்படுத்தாது பக்கத்து மையங்களில் இருக்கும் பல அப்யாசிகள், அருகிலிருக்கும் ஆசிரமத்தில் கூடினர். இந்நாட்களில், ஆசிரமங்களில் பல்வேறு வகையான செயற்பாடுகள் இருந்தன. பூஜ்ய லாலாஜி மகராஜின் வாழ்க்கையும் போதனையும், உரையாடலின் கொள்கைகள், குண உருவாக்கம், உள்முகத் தேடல் போன்ற பல தலைப்புகளில் உரைகள் இருந்தன. லாலாஜியின் வாழ்வைப்பற்றிய குறுகிய நாடகம், பாட்டுக்கள் மற்றும் ஆடல்கள் போன்றவற்றுடன் சிறுவர்களும், இளைஞர்களும் இவ்விழாவில் பங்கெடுத்து, இவ்விழாவை வண்ணமயமாகவும் நீங்காநினைவாகவும் செய்தனர். அனைவரும் மாஸ்டர்களின் தெய்வீக அருளில் திளைக்க வாய்ப்பாக இவ்விழா அமைந்தது. பல்வேறு மையங்களில் நடந்த விழாக்களைப் பற்றி பல அறிக்கைகள் எக்கோஸ் குழுவிற்கு வந்தன. சில மையங்களின் புகைபடங்கள் கீழே உள்ளன.


அலகாபாத்


புவனேஷ்வர்


ஜோத்பூர்


ஈரோடு


கஜியாபாத்


கொல்கத்தா


ஜெய்பூர்


சோன்பட்


பய்யனூர்


கரக்பூர்


ஹூப்ளி


வதோதரா


மீரட்


லக்னௌ


மதுரை


டெல்லி


திருப்பூர்

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## யூ-கனெக்ட் செயல்பாடுகள்

2013 ஏப்ரலில் அறிமுகம் செய்ததிலிருந்து, மிஷனின் யூ-கனெக்ட்-ன் கீழ் தொடங்கப்பட்ட சுய மேம்பாட்டு நிகழ்ச்சிகள், இந்தியா முழுவதும், மற்றும் உலகத்தின் மற்ற பகுதிகளிலும் பரவலாக நடைபெற்று வருகின்றன. சமீபத்தில் கொண்டு வரப்பட்ட புதிய ஆலோசனைகள் மற்றும் நுட்பமான செயல்முறை, ஆகியவற்றால் மாஸ்டரின் பணியில் ஈடுபாடு மற்றும் பங்கு கொள்ளும் வாய்ப்பு விரிவடைந்துள்ளது.

வாய்ப்புகள் அதிகரித்து இருப்பதை கருத்தில் கொண்டு பற்பல மாற்றங்கள் நடைமுறைக்கு வரவுள்ளன. இது தொடர்பாக அவ்வப்போது தெரிவிக்கப்படும் மாற்றங்களை யூ-கனெக்ட் ஒருங்கிணைப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் ஆகியோர் நன்கு தெரிந்து வைத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

யூ-கனெக்ட் நிறுவனம் 15 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, பிராந்திய ஒருங்கிணைப்பாளர்கள், சம்பந்தப்பட்ட மண்டல மற்றும் மையப் பொறுப்பாளர்களுடன் பணியாற்றி வருகின்றனர். பயிற்சி அளிப்பதற்கும், தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும் மணப்பாக்கத்தில் யூ-கனெக்ட் உதவிக் குழு ஒன்றை நாங்கள் அமைத்துள்ளோம். தற்சமயம் இது சம்மந்தமான ஆவணங்களை இந்தியில் மொழி மாற்றம் செய்து வருகிறோம்.

இந்த பணியில் பங்கு கொள்ள, தயவு செய்து கீழ்க் குறிப்பிட்ட வலைத் தளத்தில் விபரங்களைப் பதிவு செய்யவும். http://www.sahajmarg.org/resources/programs/uconnect கடந்த சில மாதங்களாக பற்பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அதன் சிறப்பு அம்சங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**குஜராத், சூரத்**தில், உக தர்சாடியா (uka Tarsadia) பல்கலைக்கழகத்தின் மாலிபா வளாகத்தில் முதன் முதலாக யூ-கனெக்ட் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கும் மேலாகிவிட்டது. முதல் சுய மேம்பாட்டு நிகழ்ச்சி (SDP) பல்கலைக்கழகத்தின் 250 ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்டது. இன்று வரை 100க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் முறையான தியான பயிற்சிக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளனர். சுமார் 30-40 ஆசிரியர்கள், சனிக்கிழமை பிற்பகல்களில், குழுத் தியானங்களில் கலந்து கொள்கின்றனர். இரண்டு ஆண்டுகளில், இந்த சுய மேம்பாட்டு நிகழ்ச்சியானது, 8 கல்லூரிகளில் நடத்தப்பட்டது. சுமார் 350 மாணவர்கள் சகஜ மார்க்கத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். வார நாட்களில் மாணவர்களுக்கு, சிறு சிறு குழுக்களாக சத்சங்கம் நடத்தப்படுகிறது. யூ-கனெக்ட் தொடங்கியவர்களிடம், பல்கலைக்கழகம் அளித்த உறுதிமொழிகளில், ஒரு தியானக்கூடம் அமைப்பதும் ஒன்றாகும் அதன்படி தியான மையம், 2015 ஜனவரி 17 ம் தேதி, முறைப்படி ஆரம்பிக்கப்பட்டது. அப்யாசிகள் அதில், நூலகம் ஒன்றையும் அமைத்துள்ளனர். சமீபத்தில் SHPT இந்த நூலகத்திற்கு புத்தகங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.


சிலிகுரி

**புனே, மகாராஷ்ட்ரா**வில் ஜனவரி 1-ம் தேதி, இந்தியன் இரயில்வே அலுவலர்களுக்காக, புனே, இந்தியன் இரயில்வே இன்ஸ்டிடியுட் ஆப் சிவில் இன்ஜினீரிங் (IRICEN)ல் சிறப்பு ஒரு நாள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. சகோ.ஹர்ஷல் ஜவேலே, நன்னடத்தை மற்றும் நன்னெறியை மையப்படுத்தி பயிற்சி முகாமை நடத்தினார்.

**மத்தியபிரதேசம், விதிஷா**வில், யூ-கனெக்ட் குழு, ஜனவரி 18ம் தேதி, அரசு பெண்கள் கல்லூரியில் சுய மேம்பாட்டு நிகழ்ச்சிகளைத் துவக்கியது. இதில் 100 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

சண்டிகர், ஹரியானா, தமிழ் நாடு, இந்தூர், ராஜஸ்தான், மற்றும் சிக்கிம் ஆகிய இடங்களில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. பல பகுதிகளில், யூ-கனெக்ட் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.



மாலிபா


விதிஷா

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## அகில இந்திய அளவிலான கட்டுரை எழுதும் நிகழ்வு 2014

இந்த ஆண்டின் நிகழ்வு, அகில இந்திய கட்டுரை எழுதுதல் நிகழ்வு அமைப்பின் மூலம், சர்வதேச இளைஞர் தினத்தை நினைவு கூரும் பொருட்டு, SRCM மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் தகவல் மையம், (UNIC) இந்தியா மற்றும் பூடானின் கூட்டு முயற்சியின் பத்தாவது ஆண்டைக் குறித்தது. முதல் வகையினருக்கான தலைப்பு (9 -12ம் வகுப்பு மாணவர்கள்)ஷேக்ஸ்பியரின், "உன்னுடைய சுயத்திற்கு உண்மையாக இருப்பது எல்லாவற்றுக்கும் மேலானது." என்ற மேற்கோள் ஆகும். இரண்டாம் வகையினருக்கான (இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்கள்) தலைப்பும் அதே கருத்தை ஒத்திருந்தது; " உண்மையாக இருப்பதே மனிதனாக இருப்பது." பங்கேற்பாளர்கள், அவர்களது தலைப்புகளைப் பற்றி ஆராய்ந்து, கலந்துரையாடலாம். ஆனால், அசல் பிரதிகள் அவர்களது சொந்த கையெழுத்தால் எழுதப்பட்டதாக இருக்க வேண்டும். SRCM விருப்பமுடைய கல்வி நிறுவனங்களை பங்கேற்பதற்கு அழைக்கிறது எனினும், புள்ளி விவரத்தின் மீது கவனம் செலுத்துவதில்லை. இருப்பினும் இரண்டு வகைகளிலும், பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை, வருடம்தோறும் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. இந்த வருடம் 9841 பள்ளிகளிலிருந்து 1,64,475 மாணவர்கள் முதல் பிரிவிலும், 2016 கல்வி நிறுவனங்களிலிருந்து, 21,276 கல்லூரி மாணவர்கள் இரண்டாம் பிரிவிலுமாக, மொத்தம் 11,857 கல்வி நிறுவனங்களிலிருந்து, 1,85,751 மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இரண்டு பிரிவிலும் உயரிய விருதுகள், முதல் முறையாக ஒரே மொழி கட்டுரைகளுக்கு கிடைத்துள்ளது- தெலுங்கு மொழி. நந்தியாலில் உள்ள குட் ஷெப்பர்ட் ஆங்கிலப் பள்ளியின், பத்தாம் வகுப்பு மாணவி S.தியா நிசி, மற்றும் ஸ்ரீகாகுளம், ராஜிவ்காந்தி மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனத்தில் MBBS இறுதி ஆண்டு பயிலும் டடி சுஜோய் கிரன் இருவரும், முறையே முதல் மற்றும் இரண்டாம் பிரிவு வெற்றிக்கோப்பைகளைப் பெற்றுள்ளனர்

முதல் பரிசுகளைப் பெற்ற இருவரின் கட்டுரைகளும், அடுத்த பரிசுகளைப் பெற்ற கட்டுரைகளின் சில பகுதிகளும், www.sahajmarg.org/essay-event என்ற SRCMன் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. கடந்த வருடங்களைப்போல, பரிசு வழங்கும் விழாக்கள், SRCM -ன் பல்வேறு மையங்களில் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகள், வருகை புரிந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் விருது பெற்றவர்கள் அனைவருக்கும், மிஷனைப் பற்றி தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பை அளித்தன.


ஜோத்பூர்


திருப்பூர்


பாலி


லக்னௌ


கொல்கத்தா


பாட்னா


திருச்சிராப்பள்ளி



மைசூர்

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# அனைத்து இந்திய கட்டுரை எழுதும் நிகழ்வின் பரிசளிப்பு விழா


அலகாபாத்


பிகானீர்


பிஜ்னொர்



ஸ்ரீகங்காநகர்



உஜ்ஜெய்ன்


ஒளரங்காபாத்


பைய்தான்


கோவில்பட்டி


பசவகல்யாண்


வள்ளியூர்


ஹுப்ளி


அலுவா


குல்பர்க்கா



லால்பனியா


மதுரை


வடக்கு பரவூர்


சிதாபூர்


பாலக்காடு


மும்பை


சிலிகுரி


திருச்செந்தூர்



ராஞ்சி





## இளைஞர் நிகழ்ச்சிகள்

### விசாகப்பட்டினம், ஆந்திரபிரதேசம்

ஜனவரி 17 அன்று, விசாகப்பட்டினம் மையத்தில், 50 இளைஞர்கள் பங்கேற்ற. மண்டல இளைஞர் கருத்தரங்கு ஒன்று, "இணைந்து வளர்தல்" என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. மண்டல பொறுப்பாளர் சகோ. ஆதிநாரயணா அவர்கள், இளைஞர்கள் அகங்காரத்திலிருந்து விடுபட்டிருக்க வேண்டும் என்றும், அன்பை மேம்படுத்துகின்ற சேவையின் முக்கியத்தவத்தை வலியுறுத்தியும், தங்களுடைய சாதனாவில் முறையாக இருக்க அவர்களை ஊக்கப்படுத்தியும் அறிவுரை வழங்கினார்.

பங்கேற்பாளர்கள், உரைகள், விளக்கக் காட்சிகள் மற்றும் இளைஞர்களுக்கு தொடர்புடைய தேர்ந்தெடுக்கப்பட்ட மென்குரல் செய்திகள் அனைத்தையும் கவனமாகக் கேட்டனர். சுவாரசியமான குழு அமைத்தல் செயல்பாட்டில், பல குழுக்களாகப் பிரிந்து, தங்கள் குழுக்கென்று கொடுக்கப்பட்ட பணியை செய்து முடித்தனர். மதிய உணவுக்குப்பின்னான நேரத்தில், யதேச்சையாக, உலகளாவிய இணையதள கருத்தரங்கும் நடைபெற்றது. அது 3.30 மணி வரை நீடித்தது. அந்த நிகழ்ச்சியானது, உலகம் முழுவதும் உள்ள அப்யாசிகள், பரிணாம வளர்ச்சிக்கு தேவையான குணங்களை எவ்வாறு மேம்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது. மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி முடிவுற்றது. சகோ. சப்தமுகுலு, அவர்களுக்கு, ஆறு மாதங்களுக்குப் பிறகு நடக்கவிருக்கும் இளைஞர் கருத்தரங்கிற்கு அழைப்பு விடுத்தார்.

### ஹல்த்வானி ஆசிரமம், உத்தரகாண்ட்

"தூய்மை விதியை நிர்ணயிக்கிறது " என்ற தலைப்பில், அந்தப் பகுதிகளின் 82 இளைஞர்கள் கலந்துகொண்ட ஒரு கருத்தரங்கு, ஹல்த்வானி ஆசிரமத்தில் ஜனவரி 24 - 26 நடைபெற்றது. 24-ந் தேதி ஆசிரமம் நன்கு அலங்கரிக்கப்பட்டு, ஒரு விழாக் கால மனநிலையுடன் கருத்தரங்கம் தொடங்கப்பட்டது. மாலையில் bonfire மூட்டப்பட்டது. 25ம் தேதி காலை சகோ. B.S. சுபால் (மண்டல பொறுப்பாளர்) உரையாற்றினார். மதிய உணவுக்குப்பின், பொழுதுபோக்கு குறித்த ஒரு பயிற்சி, புகழ்பெற்ற இயற்கை புகைப்படக்கலைஞரும், மலையேறுவதில் வல்லுனருமான திரு. அனுப்ஷா அவர்களால் நடத்தப்பட்டது. அதில் பொறுப்புணர்வு, அன்பு மற்றும் தீவிர நோக்கத்துடன், கொடுக்கப்பட்ட வேலையை செய்யவேண்டுமென வலியுறுத்தப்பட்டது. தினசரி பயிற்சிக்கான அர்ப்பணிப்பின் தேவை, குணநல மேம்பாடு, மற்றும், ஒருவர் முன்னேறும்போது, ஆளுமைப் பண்புகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களைப் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றையும் அக்கருத்து வலியுறுத்தியது. ஒரு கலைநிகழ்ச்சி, அந்த ஆசிரம உருவாக்க வீடியோக் காட்சிகள் மற்றும் கபீரின் வாழ்க்கை வரலாறு நாடகம் ஆகியவை இருந்தன. ஜனவரி 26 அன்று கொடியேற்றமும், அதன்பின் பிரிவு வாழ்த்துரையும் இருந்தது. எதிர்காலத்தில் இதைப் போன்று நிகழ்ச்சிகள் நடத்த ஆலோசனைகளும், கருத்துக்களும் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

### கோலார் ஆசிரம வருகை, கர்நாடகா

பிப்ரவரி 8ம் தேதி, பனசங்கரி ஆசிரமத்திலிருந்து 21 இளைஞர்களை கொண்ட ஒரு குழு, கோலார் ஆசிரமத்திற்கு பயணம் செய்தது. பெங்களூருவிலிருந்து வந்த குழு மட்டுமில்லாமல், கோலார் மற்றும் குப்பம் மையத்திலிருந்து வந்த அப்யாசிகள் குழுக்களும், இந்த செயல்பாடுகளில் கலந்து கொண்டன.

அறிமுக நிகழ்ச்சிக்குப் பிறகு, பங்கேற்பாளர்கள் அனைவரும் சிறு குழுக்களாகப் பிரிந்து மிஷன் தொடர்புடைய கேள்விகளுக்கும், குறுக்கெழுத்துப் புதிருக்கும் விடை கண்டுபிடித்தனர். லட்சியத்தை குறித்த சுய ஆய்வு நிகழ்ச்சியைத் தொடர்ந்து, இளைஞர்கள் தங்கள் லட்சியத்தை அடைவதற்கான அணுகு முறையை மறு ஒழுங்கு செய்யவேண்டியதன் தேவை பற்றி கலந்துரையாடப்பட்டது. மதிப்பிற்குரிய கமலேஷ்ஜி அவர்களால் சமீபத்தில் வழங்கப்பட்ட நான்கு ஆலோசனைகளையும் எவ்வாறு பயிற்சி செய்ய வேண்டுமென சுருக்கமாக விளக்கப்பட்டது. பின் நடந்த புதையல் வேட்டையில் பங்கு பெற, மிஷனின் அடிப்படை கோட்பாடுகள் மற்றும் தகவல்களை அறிந்திருத்தல் அவசியமாக இருந்தது. அந்த ஆசிரமத்தில் நேரத்தை செலவிட்டதிலும், உள்ளூர் அப்யாசிகளின் அன்பான கவனிப்பாலும் மகிழ்ச்சியுற்ற அந்தக் குழுவினர், மதிய உணவிற்குப் பிறகு, பெங்களூருக்குத் திரும்பினர்.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்



## குளிர்கால முகாம், அகமதாபாத், குஜராத்

ஜனவரி 24-26 ஆகிய மூன்று நாட்களுக்கு, அகமதாபாத் அடலஜ் யோகாசிரமத்தில், குழந்தைகளுக்கான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. 24ம் தேதி, வரவேற்புரையுடன் முகாம் துவங்கியது. 'மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுங்கள்; உங்களுக்கு உங்களுடைய மகிழ்ச்சி கிட்டும்' என்ற செய்தியைத் தெரிவிக்கும், குஷி' என்ற விளையாட்டின் மூலம், தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். பின்னர் குழந்தைகளுக்கு, வெங்காயச் செடிகளை ஊன்றுவது பற்றி கற்றுத்தரப்பட்டது. கேள்வி-பதில் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து மென்திறன்களைக் கற்றுக் கொள்ளுதல் என்ற நிகழ்ச்சியும் இருந்தன. தற்காப்பு, ஆரோக்கிய உணவு மற்றும் ஆரோக்கியமாக இருக்க ஆலோசனைகள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இரவு உணவிற்கு பின் குழந்தைகள் குளிருக்காக மூட்டப்பட்டிருந்த நெருப்பைச் சுற்றி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். அடுத்த நாள், குழந்தைகள், விக்ரம் சாராபாய் சமுதாய மையத்திற்கு அழைத்துச் செல்லபட்டனர். மாலையில், ஆசிரமத்திற்கு வந்தவுடன், குழந்தைகள் கலாச்சார நிகழ்ச்சிகளையும், விளையாட்டுகளையும் வழங்கினார்கள். ஜனவரி 26ம் தேதி, மிகுந்த ஆர்வத்துடன் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. கொடி ஏற்றம், தேசிய கீதம், தேசபக்தி பாடல்களை பாடுதல், மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும், பரிசு வழங்கும் நிகழ்ச்சியுடன் நிறைவுற்றன. மதிய உணவிற்கு பின் முகாமும் முடிவுற்றது. குழந்தைகள் நண்பர்களாகியும், புதிய திறன்களைக் கற்றுக் கொண்டும், திறன்களை வெளிப்படுத்தியும், குதூகலத்துடன் இருந்தார்கள்.

## ஆண்டு விழா கொண்டாட்டம், கொல்கத்தா

கொல்கத்தாவிலுள்ள, பாபூஜி மெமோரியல் ஆசிரமத்தை, டிசம்பர் 24, 2003 அன்று சாரிஜி மகராஜ் துவக்கி வைத்தார். மையத்தில் பல வருடங்களாக, இந்த போற்றத்தக்க நாள், ஆண்டு விழா நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. குறிப்பாக குழந்தைகளுக்கு குதூகலம் நிறைந்த நாளாக்குவதற்கு, விளையாட்டும், பல்வேறு நிகழ்ச்சிகளும் மையத்தில் நிகழ்த்தப்படுகின்றன. இந்த வருடம் ஜனவரி 18ம் தேதி, இந்நாள் கொண்டாடப்பட்டது.

குழந்தைகள் மற்றும் இளைஞர் மையத்தின் (CYC) தன்னார்வத் தொண்டர்கள், திட்டங்களை அறிவித்து, பல்வேறு வயதினருக்கும் 32 நிகழ்வுகளை ஒருங்கிணைத்தனர். பல்வேறு பந்தயங்களில் இளம் மற்றும் முதிர்ந்தவர்கள் பங்கேற்று மகிழ்ந்தனர், ஓட்டம் இல்லாத விளையாட்டுக்களில் மிக வயதான அப்யாசிகள் கலந்து கொண்டனர். அநேக நிகழ்வுகள், நன்னெறி மற்றும், விரும்பத்தக்கதான பண்புகளின் அம்சங்களைக் கருத்தில் கொண்டே, உருவாக்கப்பட்டிருந்தன. மேலும், பயிற்சிமுறையின் அம்சங்களை கொண்ட விளையாட்டை விளையாடுவதற்கு அப்யாசிகளுக்கு வாய்ப்பு கிட்டியது. இந்த நாள், அனைவரும், ஆசிரமத்தின் தெய்வீக சூழலில், அன்புடனும், சகோதரத்துடனும் ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்திக் கொண்டு, அதே சமயம் தங்களின் சிறப்பையும் வெளிப்படுத்த, சிறந்ததொரு வாய்ப்பை அளித்தது.

## மண்டல கூட்டம், ஹரியானா

பிப்ரவரி 8ம் தேதி, சோனேபட் ஆசிரமத்தில், Dr. சத்யா N மண்டல், (மண்டல பொறுப்பாளர், மண்டலம்-21) மண்டல கூட்டம் ஒன்றைக் கூட்டினார். 37 பிரிபெக்ட்கள், ஒருங்கிணைப்பாளர்கள், உதவியாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் ஹரியானா மையங்களைச் சேர்ந்த மையப் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மண்டலப் பொறுப்பாளர், மற்றும் குறிப்பிட்ட இடங்களின் ஒருங்கிணப்பாளர்களும், ப்ரிபெக்டகளும், மைய, மண்டல செயல்பாடுகளின் அறிக்கைகள், அவரவர் மையங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஆகியவற்றின் முக்கிய அம்சங்கள் பற்றியும், 2014 ம் வருடத்தில் அவர்கள் சந்திக்க நேர்ந்த தடைகள் பற்றியுமான ஒரு அறிக்கையை வழங்கினர். பானிபட் மற்றும் ரோஹ்டக் ஆகிய இடங்களில், ஆசிரம வசதிகளைக் கட்டுவதற்கு மாஸ்டர் அனுமதி அளித்துள்ளார் என்பதைக் கேட்டு அங்கிருந்த அப்யாசி சகோதர, சகோதரிகள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். அவ்விடங்களில் கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்க உள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் அனுபவிக்கப்பட்ட தடைகள் அனைத்தும் விவாதிக்கப்பட்டு, அவற்றைக் கடப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. கூட்டத்தின் 37 பங்கேற்பாளர்களும், கடந்த வருடத்திய செயல்பாடுகளைப் பற்றிய தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து மண்டலத்தின் யூ-கனெக்ட் செயல்பாடுகளின் தொகுப்பும் வழங்கப்பட்டது.



## செய்தித்துணுக்குகள்:



### ஜெய்ப்பூர்-தெலங்கானா ►

ஜனவரி 10, 11 ம் தேதிகளில் ஜெய்ப்பூர் ஆசிரமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரண்டு நாட்கள் அகத்தாய்வு நிகழ்ச்சியில் 35 அப்யாசிகள் கலந்து கொண்டனர். "அவரது தொலைநோக்குப் பார்வையைப் பகிர்ந்து கொள்ளுதல்" மற்றும் "அவரது நோக்கத்தினைப் பூர்த்தி செய்தல்" ஆகிய தலைப்புகள் நிகழ்ச்சியில் கலந்துரையாடப்பட்டன. மாஸ்டரின் சமீபத்திய உரைகளிலிருந்து முக்கியமான கருத்துக்கள் வழங்கப்பட்டன. நவம்பர் மாதம் மணப்பாக்கத்தில் நடைபெற்ற அகில இந்திய இளைஞர் கருத்தரங்கத்தில் கலந்து கொண்ட உதவியாளர்கள், தனது அனுபவத்தையும், முக்கிய கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.



### ◄ திருப்பூர், தமிழ்நாடு

ஜனவரி 25 ம் தேதி அன்று, பத்து நியமங்கள் குறித்த 1 நாள் நிகழ்ச்சி, செட்டிபாளையம் ஆசிரமத்தில் ஹிந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் 47 அப்யாசிகள் கலந்து கொண்டனர். இதே நிகழ்ச்சி ஆங்கிலத்தில் 26, 27ம் தேதிகளில் நடைபெற்றது. திருப்பூர், சோழவந்தான் மற்றும் பெங்களூருவிலிருந்து 57 அப்யாசிகள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு நியமமும் விரிவாக விளக்கப்பட்டது. நிகழ்ச்சியின் ஒவ்வொரு நாள் மாலையிலும் ஒரு வினா-விடை நிகழ்வும், அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்வும் இருந்தன. இந்நிகழ்ச்சியின் பொழுது, நமது அன்றாட வாழ்க்கையில் பத்து நியமங்கள் குறித்த பல்வேறு சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.

### சிக்மகளூரு, கர்நாடகா

ஜனவரி 11ம் தேதி ஞாயிறு அன்று சிக்மகளூரு மையத்தில் அப்யாசிகள் குடும்பங்களுக்கான சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அனைத்து அப்யாசிகளும் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் கலந்து கொண்டனர். அனைவரும் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விளையாட்டுகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது.



### குல்பர்கா, வட கர்நாடகா

இன்றைய சமுதாயத்தில் உள்ள இளைஞர்களின் நிலை மற்றும் தங்களை மேம்படுத்திக் கொள்வதில் அவர்களின் பங்கு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஜனவரி 13ம் தேதி அன்று அப்பா பப்ளிக் பள்ளியில் தேசிய இளைஞர் தினம் கொண்டாடப்பட்டது. டாக்டர். கஜேந்திர சிங் (மண்டலப் பொறுப்பாளர், மண்டலம் 4E) மற்றும் சகோ. ஸ்ரீகாந்த் ஜோஷி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். இதயம்தான் அன்பு மற்றும் அகத்தூண்டுதலுக்கான பிறப்பிடம். ஆகையால், நமது வாழ்க்கையின் அனைத்து சூழ்நிலைகளிலும் இதயத்தின் உதவியைத்தான் நாட வேண்டும் என்று டாக்டர். கஜேந்திரசிங் இளைஞர்களைக் கேட்டுக்கொண்டார். 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



## வரவேற்புக் கூட்டங்கள்



**சிர்சி, வட கர்நாடகா :** ஜனவரி 24 ம் தேதி அன்று வனக்கல்லூரியில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில், அக்கல்லூரியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட சுமார் 50 ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் 21 ஆர்வலர்கள் தங்களது அறிமுக தியானத்தை எடுத்துக்கொண்டனர். ஜனவரி 26 அன்று தோட்டக்கலை வேளாண் கல்லூரியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் 16 ஆர்வலர்கள் பயிற்சியை ஆரம்பிக்க தங்களது விருப்பத்தினைத் தெரிவித்தனர்.



**கரக்பூர், மேற்கு வங்காளம் :** ஜனவரி 25ம் தேதி நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் 60 ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் சுமார் 30 ஆர்வலர்கள் பயிற்சியினை ஆரம்பிக்க ஆர்வம் தெரிவித்தனர்.

## நன்னெறி கல்வி நிகழ்ச்சி

கல்வி ஆண்டு 2014—2015 க்கான SHPTயின், சீரமைக்கப்பட்ட நன்னெறிக் கல்வித் திட்டம், 8 மையங்களின் 15 பள்ளிகளில் தொடங்கப்பட்டது. இதன் அனுபவம் மிகுந்த ஊக்கமளிப்பதாக இருந்தது. மேலும் பல மையங்களும், பள்ளிகளும் வரும் கல்வி ஆண்டில் இதைத் துவக்கத் தயாராக உள்ளனர். பங்கேற்ற பள்ளிகளில் இருந்து பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையில், பாடத்திட்டம் மேம்படுத்தப்படும். பங்கேற்கும் அனைத்து மையங்களுக்கும் போதுமான பயிற்சி அளிக்கப்படும். நன்னெறிக் கல்வித் திட்டத்தை உங்கள் இடங்களில் அறிமுகப்படுத்தவும், தன்னார்வப் பணியாற்றவும் விரும்புபவர்கள், தயவுசெய்து http://www.sahajmarg.org/resources/programs/values-education என்ற வலைத்தளத்திற்குச் செல்லவும்.

## திருச்சி மையம், தமிழ்நாடு



இந்நிகழ்ச்சி, 2014-15 கல்வியாண்டில், ஸ்ரீ சிவானந்த பாலாலயா பள்ளியின் உயர்நிலை மாணவர்களுக்கு, நடத்தப்பட்டது. 2014, ஜூன் 3ம் தேதியன்று அறிமுக நிகழ்ச்சியுடன் தொடங்கப்பட்டது. இப்பாடத்திட்டம், முக்கியமாக, காணொளி, கதைகள், மற்றும் செயற்பாட்டு முறைகளை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். மாணவர்களும், உதவியாளர்களும், வாழ்வு முறைத்திறன் பற்றி மேலும் நன்கு அறிந்து கொள்ள, சுயசோதனை அமர்வுகள் உதவின. குண உருவாக்கம் என்ற பகுதியின் போது, உதவியாளர்கள், மாணவர்களுடன் மிகச் சிறந்த அனுபவம் பெற்றனர். இந்நிகழ்ச்சி 2015 பிப்ரவரி 7ம் தேதி நிறைவுற்றது. நிகழ்ச்சிக்குப் பிறகு, மாணவர்களும், ஆசிரியர்களும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். நேர்மறை மாற்றத்தை ஏற்படுத்தும் இத்திட்டத்தை வரும் கல்வியாண்டிலும் மேற்கொள்ள தயாராக இருக்கின்றனர்

## புதிய வெளியீடுகள்




பத்து நியமங்களின் விரிவுரை
பெங்காலி




பத்து நியமங்களின் விரிவுரை மற்றும் ராஜயோகத்தின் செயல் திறன்
ரஷ்ய மொழி ஆடியோ புத்தகம்




ஒளி உலகத்திலிருந்து மென்குரல்கள்- ஸ்பானிய மொழி - ஆடியோ புத்தகம்

ஒளி உலகத்திலிருந்து மென்குரல்கள்- 5 வது வெளிப்பாடு

ஃபிரஞ்சு மொழி




### நிலையான நினைவு - ஆங்கிலம்

இந்த ஜனவரி இதழ், நம் மாஸ்டர் சாரிஜி மகராஜின் வாழ்க்கை, மற்றும் அவர் ஆற்றிய பணிகளை நினைவுகூரும் சிறப்பு இதழாகும். சந்தாதாரர் அனவருக்கும் இம் மலர் கிடைக்கப்பெறும். அத்துடன், புத்தகக் கடையிலும், கார்பஸ் பகுதியிலும், இம்மலர் விற்பனைக்காகவும் உள்ளது.

### அறிவிப்பு

பூஜ்யஸ்ரீ பாபூஜி மகராஜின் பிறந்த நாள் விழா 2015, ஏப்ரல் 29 முதல், மே 1 வரை, இந்தியாவில், உத்திரப்பிரதேசம், லக்னௌவில் நடைபெறும்.

நம் அன்புக்குரிய சாரிஜி மகராஜின் பிறந்தநாள் விழா, 2015, ஜூலை 23 முதல் 25 வரை, இந்தியாவில், தமிழ்நாடு, திருவள்ளூரில் நடைபெறும்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# லய யோக ஆசிரமம், வாரணாசி, உத்தரப்பிரதேசம் ஒளி மையம்





வாரணாசியில், ஞாயிறு சத்சங்கம், 1989ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது. 1989 முதல் 2001 வரை, சத்சங்கம் நடைபெறும் இடங்கள் மாறிக்கொண்டே இருந்தன. இறுதியில், ஆசிரம நிலத்தில் ஒரு தற்காலிக தியானக் கூடம் அமைக்கப்பட்டது.

*"சகஜ மார்க்கம் என்பது ஒரு அன்பு வழியாகும். இந்த இடத்தை நாம் நமது ஆன்மீக மேம்பாட்டிற்காகப் பயன்படுத்த வேண்டும். சகஜ மார்க்கத்தில் வெறுப்புக்கு இடமே இல்லை."*

- பார்த்தசாரதி ராஜகோபாலாச்சாரி

டிசம்பர் 4, 2011, சென்னை

## ஆசிரமத் தோற்றம்

2001ம் ஆண்டு, மாஸ்டர் டில்லி வந்த போது, சாரநாத்தில், ஆசிரமத்திற்கு ஒரு தனி இடம் பார்க்கும்படி, மையப்பொறுப்பாளர் டாக்டர் பிரசன்ன குமாரிடம் கூறினார். 2001, ஜூலை 5ம் தேதி, 5,438 சதுர அடி உள்ள ஒரு துண்டு நிலம், அப்போது மையப் பொறுப்பாளராக இருந்த டாக்டர் பிரசன்ன குமார் அவர்களால், ஸ்ரீ ராம் சந்த்ரா மிஷனின் பெயரில், பதிவு செய்யப்பட்டது. 2001, டிசம்பர் 16ம் தேதி, மாஸ்டர் வாரணாசிக்கு வருகை புரிந்து, ஆசிரமத்திற்கு அடிக்கல் நாட்டி, ஒரு தற்காலிக தியானக் கூடத்தையும் துவக்கி வைத்தார். 2005ம் ஆண்டு, புதிய தியானக்கூடம் கட்டுவதற்கான திட்டத்திற்கு மாஸ்டர் ஒப்புதல் வழங்கி, 2006, பிப்ரவரி 16 ம் தேதி, அடிக்கல் நாட்டினார்.

ஆசிரமக் கட்டமைப்புத் திட்டத்திற்கான ஒப்புதல் பெற்று, தேவையான நிதி திரட்ட, மேலும் நான்கு வருடங்களாயின. 2009, நவம்பர் 2ம் தேதி, சகோ. வாஜ்பாய் முன்னிலையில், புதிய தியானக்கூடத்திற்கான கட்டுமானப் பணி துவங்கியது, உச்சியில் ஒரு தாமரைப் பூவுடனான, எண்கோண வடிவ தியானக் கூடம், 2011, மே மாதம் தயாரானது. 2011, டிசம்பர் 4ம் தேதி, மாஸ்டர், சென்னையிலிருந்து, காணொலித் தொடர்பு மூலமாக, தியானக் கூடத்தைத் திறந்து வைத்து அர்ப்பணம் செய்தார். இந்த புனித நிகழ்வின் போது, சுமார் 1000 அப்யாசிகள் கூடியிருந்தனர்.

## செயற்பாடுகள்

மண்டல அளவிலான இளைஞர் பணிமுகாம்கள், நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி பணிமுகாம்கள், GITP நிகழ்ச்சிகள் ஆகிய பல நிகழ்வுகள் இந்த ஆசிரமத்தில் நடைபெற்று வருகின்றன. கடந்த 10 ஆண்டுகளாக, கட்டுரை எழுதும் நிகழ்வும் நடந்து வருகிறது.

தற்சமயம் இம்மையத்தில், 1352 அப்யாசிகள் உள்ளனர். சுமார் 325 அப்யாசிகள் ஞாயிறு சத்சங்கங்களில் கலந்து கொள்கின்றனர்.

உணவுக்கூடம், மாஸ்டரின் அலுவலகம்/ விருந்தினர் அறை, நூலகம், தகவல் தொழில்நுட்ப அறை, கணக்கர் அலுவலகம், GITP பயிற்சிக்கூடம், ஒரு தோட்டம், குழந்தைகள் மையம் மற்றும் காப்பாளர் அறை ஆகியவை இந்த ஆசிரமத்தில் உள்ள பல்வேறு வசதிகள் ஆகும்.







To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2015 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.